புதுவையில்

# கணித ஆசிரியர் பயிற்சி முகாம்

## கல்வி துறையில் நடந்தது

புதுச்சேரி, மார்ச்.11–

புதுவை அறிவியல் இயக்கம், மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்ப துறையின் உதவியுடன் கணித ஆசிரியர் பயிற்சி முகாம் கல்வி துறை வளாகம் 3–வது தளத்தில் உள்ள கருத்தரங்க கூடத்தில் 2 நாட்கள் நடந்தது. அறிவியல் இயக்க தலைவர் அருள்செல்வன் தலைமை தாங்கினார். அறிவியல் இயக்க பொது செயலாளர் சேகர் வரவேற்றார். பள்ளி கல்வித்துறை துணை ஆய்வாளர் ஹேமாவதி முன்னிலை வகித்தார். அறிவியல் தொழில்நுட்பம் சுற்றுச்சூழல் துறை இயக்குனர் துவாரகநாத் சிறப்புரை வழங்கினார். இந்திய கணித அறிவியல் துறை பேராசிரியர் கமல்லொடையா, குமார், செல்வாம்பாள், மாறன், ரகுநாத் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.